[10th November 1965

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. சங்கரன் : வட ராஜ்யங்களிலே அஜந்தா குகை போன்ற இடங்களில் உள்ள சித்திரங்களை எடுத்து வெளியிடு கிறார்கள். அதே போல நம்முடைய மாநிலத்திலுள்ள சித்தன்ன வாசல் மூரல் பெய்ண்டிங்குகளை வெளியிட்டு, எல்லோருக்கும் வினியோகிக்க சர்க்கார் முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : நம்முடைய ராஜ்யத்திலும் முயற்சி எடுக்கப்பட்டு, சிதம்பரம், ஸ்ரீரங்கம் கோவில்களில் சுவற்றில் இருக்கும் சித்திரங்களை எடுத்து மதராஸ் மியூசியத்தில் வைத்திருக் கிறார்கள். பல இடங்களில் வைக்கவும் ஏற்பாடு இருக்கிறது. போஸ்டல் கார்டுகளில் படங்கள் போட்டும் அவற்றை மக்களுக்கு வினியோகிக்கிறார்கள்.

கிராம அபிவிருத்தித் திட்டங்கள்

* 413 கேள்வி.—திரு. எஸ். ஆறுமுகம் : கனம் செய்தி விளம் பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கிராம அபிவிருத்தித் திட்ட வேலைகளுக்கென மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 15 கோடியை, தேசீய நெருக்கடி காரணமாக 1966-67 ஆண்டு வரை செலவு செய்ய வேண்டும் எனப் பிறப்பிக்கப் பட்ட உத்தரவை மறு பரிசீலனை செய்யும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இல்லை.

மானாமதுரை மண்பாண்டத் தொழிலாளர் சங்கம்

* 414 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரையிலுள்ள மண் பாண்டத் தொழிலாளர் சங்கத்திடமிருந்து (பதிவு எண் 1425) மண்பாண்டம் சுடுவதற்காக சூளை ஆரம்பிக்க நில ஆர்ஜிதம் செய்யக் கோரி அண்மையில் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம்.

(இ) மானாமதுரை மண்பாண்டத் தொழிலாளர் சங்கத்திற் காகச் சூளை ஒன்று கட்டுவதற்குத் தேவையான நிலத்தை அரசாங் கச் செலவில் ஆர்ஜிதம் செய்ய உத்தேசம் உள்ளது. 1894-ம் ஆண்டு நில ஆர்ஜிதச் சட்டத்தின் 6-வது பிரிவின் கீழ் அறிவிப்பு, தேவை யான நிதி ஒதுக்கீடு செய்துவிட்டு, வெளியிடப்படும்.